# அருந்தவம்



மாதரசி அமரர்

திருமதி சிந்தாமணி (தவம்) கோபாலசிங்கம்

அவர்களின்

நினைவாக...

15.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இருமரபும் தூயதனிநாயக முதலியார் வழித்தோன்றலும்
நெடுந்தீவு மாவலித்துறையைப் பிறப்பிடமாகவும்,
29 /1 றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

மாதரசி



# சிந்தாமணி (துவம்) கோபாலசிங்கம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

15.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் திருவுருவே அகல்விளக்கே அம்மாவே
உன் பிரிவால் ஏங்கி நிற்கும் நின் கணவன் பிள்ளைகளும்
உமதன்பால் வழிநடந்த மருமக்கள் பேரர்களும்
இணையடிக்கிம்மலர் சூட்டி அஞ்சலிக்கின்தோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். ”



அன்னை மடியில்
03.10.1943

ஆண்டவன் அடியில்
16.08.2015

## அமரர்

# திருமதி கோபாலசிங்கம் சிந்தாமணி

## அவர்கள்

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மத வருடம் ஆனதமிழ் ஆடித்திங்கள்
பூண்ட துதியை தேர் திதியில் - நீண்டவுயர்
மண் விடுத்தார் மாதரசி சிந்தாமணி
விண்ணக வாழ்வை ஏற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகி
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொரு ளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகி
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகமொன்றே
குன் றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிந்தாமணி கோபாலசிங்கம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

நீரலைகள் தாலாட்டும் நித்திலம் எனப்புகழ்
பாரிலுயர் இலங்கைப் பசுமைசேர் நாட்டினில்
கூரறி வாளரும் குணமுயர் மாந்தரும்
பேறுயர் கல்விக் கூடங்கள் பெருமைசேர்
ஊரினைக் காத்திடும் உயர்வுறு ஆலயங்கள்
பாலினைப் பொழிந்திடும் பசுவினக் கூட்டமும்
பசுந்தரை உலவிடும் புரவிகள் கூட்டமும்
மன்னர்கள் வாழ்ந்த மாண்புயர் கோட்டையும்
ஏருயர் எழுச்சிநிறை வயல்களும் நிறைந்த
சீருயர் மண்ணாய் சிறப்புடன் மிளிர்வதே
நெடுந்தீவு என்னும் நிறைவுயர் நிலமது..
இத்தனை சிறப்பும் இலங்கிடு மண்தனில்
உத்தம மனிதராய் வாழ்ந்தே மறைந்த
உயர்வுறு இராம லிங்கமென் பவரும்
அன்புயர் அன்பை பிள்ளையென் பலரும்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
ஆயிரத்து தொள்ளாயிரத்து
நாற்பத்தி மூன்றா மாண்டு ஐப்பசி
இதமுயர் மூன்றாந் தேதி தன்னில்
இனியநல் மகவாய் இப்புவி மீதினில்
சிந்தா மணியவர் சிறப்புடன் மலர்ந்தார்
பிறந்தார் வளர்ந்தார் பேறுகள் பெற்றார்
பாரின் கண்ணே புகழுடன் திகழ்ந்தார்
கூரிய அறிவுக் குணமக ளாகவே
குவலயந் தன்னில் மிளிர்ந்த சிந்தாமணி
பேறுயர் கல்வியை பெருமைசேர் நெடுந்தீவு
நல்மகா வித்தியா லயத்தினில் கற்றார்
கல்வியில் மேன்மை பெற்ற நல் லாளர்
கனிவுய ராளராய் மண்ணிலே மிளிர்ந்தார்
மண்ணிலே என்றும் சிறப்புடன் திகழ்ந்த
மதிப்புய ராளர் சிந்தாமணி என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண் தன்னில் இதமுடன் வாழ்ந்த
இனிய நல்லாளர் சுப்பிர மணியமும்
பேறுயர் பார்வதிப் பிள்ளை யென்பவரும்
பெற்ற பேறுயர் மகவே ஆகிய
கோபால சிங்கம் என்பவர் தன்னை
இல்லறத் துணையாய் இனிதுட னேற்றார்
நல்லுயர் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகவே
நிறைவுயர் கடமை யாற்றிய அன்பர்
எல்லோரும் போற்றும் இனியநல் லாளராய்
இப்புவி மீதினில் என்றுமே நிகழ்ந்தார்
நல்லறங் காத்திடும் இல்லற வாழ்வில்
நலமுடன் திகழ்ந்த கோபால சிங்கமும்
சீருயர் சிந்தா மணியென் பவரும்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
கனடா தன்னில் வாழும் அன்புயர்
சாரங்கன் என்னும் சீருயரா ளரையும்
இலண்டன் மண்ணில் வாழவுள்ள அறிவுயர்
துஸ்யந்தன் என்னும் அன்புய ராளரையும்
மக்களாய் பெற்றே மகிழ்வது அடைந்தனர்
பிள்ளைகள் இருவரும் பேறுயர் கல்வியை
யாழுயர் பரியயோவான் கல்லூரி தன்னில்
கற்றே வாழ்வில் களிப்பது அடைந்தனர்
சாரங்கன் தன்னை திருமணம் புரிந்த
கனடாவில் வாழும் உஷானி என்பவரும்
துஷ்யந்தன் என்பவரை மணமது புரிந்த
இலண்டனில் வாழும் வைஷ்ணவி என்பவரும்
காலஞ் சென்ற சிந்தாமணியின்
மதிநிறை நல்மரு மக்களே ஆவர்
மண்ணக வாழ்வினை விட்டுமே மறைந்த
சீருயர் நாகம்மா என்பவர் தானும்
இம் மண் தன்னில் வாழும் பூரணமும்
காலஞ் சென்றவர்களே ஆகிய
கந்தையாவும் பொன்னம்பலம்மாவும்
இலண்டனில் வாழும் நாகரத்தினமும்
இம்மண் தனிலே இதமுடன் வாழும்
நாக சுந்தரியும் கண்மணிப் பிள்ளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற சிந்தா மணியின்
அன்புயர் சோதரர் சோதரி மார்களே
நாகம் மாலை மணமது புரிந்த
காலஞ் சென்ற சேதுபதி என்பவரும்
பூரணம் தன்னை திருமணம் புரிந்த
காலஞ் சென்ற கனகரத்தினமும்
கந்தையா என்பரை மணமது புரிந்த
காலஞ் சென்ற கமலமென் பவரும்
பொன்னம் மாவினை மணமது புரிந்த
காலஞ் சென்ற ஐயாத்துரையும்
நாகரத்தினத்தை திருமணம் புரிந்த
இலண்டனில் வாழும் வேலாயுத பிள்ளையும்
நாகசுந்தரியை மணமது புரிந்த
காலஞ் சென்ற கார்த்திகேசு என்பவரும்
கண்மணிப்பிள்ளை தன்னை மணந்த
பேறுயர் பால சிங்கமென் பவரும்
காலஞ் சென்ற சிந்தா மணியின்
மதிப்புயர் மைத்துனர் மைத்துனி மார்களே
சிந்தா மணியின் கணவராகிய
கோபாலசிங்கம் என்பவர் தம்மின்
கூடப் பிறந்த வர்களே ஆகிய
காலஞ் சென்ற கற்பகம் என்பவரும்
கனடாவிலும் வாழும் நாகம்மாவும்
காலம் சென்ற கமலமேன் பவரும்
தில்லாத்தைப் பிள்ளை என்பவர் தானும்
இம்மண் தன்னில் வாழும் அறிவுயர்
கந்தை யாவும் நற்பாலசிங்கமும்
காலஞ் சென்ற சிந்தாமணியும்
மண்ணக வாழ்வை விட்டுமே மறைந்த
அன்புயர் சிந்தா மணியென் பவரின்
மதிநிறை மைத்துனர் மைத்துனி மார்களே
கற்பகம் என்பரை மணமது புரிந்த
காலஞ் சென்ற முத்துக் குமாருவும்
நாகம்மாவை மணமது புரிந்த
காலஞ் சென்ற முருகேசு என்பவரும்
கமலம் தன்னை திருமணம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற கணபதிப் பிள்ளையும்
தில்லாத்தை பிள்ளை என்பரை மணந்த
காலஞ் சென்ற கணபதிப் பிள்ளையும்
கந்தையா என்பரை திருமணம் புரிந்த
புஸ்ப ராணி எனுமுய ராளரும்
பாலசிங்கம் என்பரை மணந்த
காலஞ் சென்ற கோமளம் என்பரும்
சிந்தா மணியை திருமணம் புரிந்த
சீருயர் சுப்பிர மணியமென்பவரும்
காலஞ் சென்ற சிந்தாமணியின்
அன்புயர் சகலன் சகலி மார்களே
இத்தரை மீதினில் இனியநற் சுற்றம்
இதமுடன் விளங்க சிறப்புடன் வாழ்ந்த
தவமென அன்பாய் தரணியில் அழைத்த
சிந்தாமணியெனும் சீருரயர் நல்லாள்
எல்லோரும் போற்றும் உத்தம மாதரசியாய்
நல்லுள்ளங் கொண்டே நலமுடன் திகழ்ந்தார்
வந்தோரை வரவேற்கும் பண்பது கொண்ட
விரும்பியராளர் சிந்தாமணி என்பவர்
மற்றவர் மனக்குறை தீர்க்கும் மனிதராய்
மண்ணிலே என்றும் மகிழ்வுடன் திகழ்ந்தார்
எல்லோரும் மதிக்கும் நல்லுள்ளங் கொண்ட
எம்முயிர் சிந்தாமணியெனும் நல்லாள்
இறையவன் விரிந்த விதியின் பயனாய்
இரண்டா யிரத்து பதினைந்தாமாண்டு
ஆவணி மாதம் பதினைந்தாந் தேதியில்
மண்ணக வாழ்வினை விட்டு இறைவனின்
பொற்புயர் மாதம் பற்றியே சென்றார்

**சாந்தி! சாந்தி! சாந்தி!**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமரமாய் வாடுவதோ!

கண்ணீரில் வாடும் நிலைதந்து - என்
கண்மணியே நீபிரிந்து சென்றதேனோ
மண்மீதில் உந்தன் பிரிவதனைத் தாங்காது
பொன்மகளே யான்படும் துயரறிய மாட்டாயோ
எண்ணமெல்லாம் உந்தன் நினைவினிலே
இனியுனைக் காணவே முடியாத...
என்னைவிட்டுப் பிரிந்து சென்றதேனோ - பாரில்
இனியான் தனிமரமாய் வாடுவதோ?
நோய்குண மாகுமென்றே நினைத்திருந்தேன்
சேய்களும் நம்பிக் காத்திருந்தனரே.
யாரறிவார் உன்னுயிர் பிரியுமென்று
நானிலத்தே உன்னை இனியென்று காண்பேன்
பல்வேறு நாடுகள் போய் மகிழ்ந்தோம்
எல்லோருடனும் அன்பாகப் பழகினோமே
பொல்லாத விதியுனைப் பற்றியதோ
அல்லலுற்றே வாடுகின்றேன் அவனியிலே நின்பிரிவால்.

கணவன்.

## ஒளி நிலவு மறைந்ததுவோ!

பாசமுடன் எமைவளர்த்து பக்குவங்கள் சொன்ன
நேசமுயர் தாயே ஏன் மறைந்தீர்
ஆசையுடன் அம்மா என்றழைப்போம்
ஆதரவுக் கரங்கொண்டு அணைப்பீரே
வீசுபுயல் எனவிரைந்த விதியினாலே - நின்
ஓசையது அடங்கியதோ ஒளிநிலவு மறைந்ததுவோ
காசினியில் இனியாம் அம்மா என்றழைக்க
கனிவுள்ளங் கொண்டவரே இங்குவர மாட்டீரோ!

பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றினிக் காண்போம்!

மதிப்புயர் மாமியாக மாநிலத்தே மிளிர்ந்தவரே
அதிதுயர் எமக்களித்து அகன்று சென்றதேனோ
விதியதன் கொடுமையால் விரைந்து சென்றீரோ
பதிக்குயர் தலைவியே பாரிலினிக் காண்போமா
உங்கள் முகங் காணாது ஏங்குகின்றோம்
கங்குலது சூழ்ந்தது போல் கவலையுற்றோம்
எங்களுயிர் மாமியே ஏன் மறைந்தீர்
இப்புவியில் உம்மை இனியென்று காண்போம்.

மருமக்கள்.

## ஓடி வாராயோ!

வாடித் துடிக்கும் நிலைதந்து எங்கள்
கூடப் பிறந்த சோதரியே மறைந்தாயோ
தேடற் கரிய செல்வமே தேனமுதே
ஓடி வாராயோ எம்துயரை நீர்த்திடவே

சகோதரிகள்.

## யாமினிமேல் காண்போமா!

உத்தமியாய் திகழ்ந்த உயர்வுறு மைத்துனியே
நித்தமும் எங்கள் நினைவுகளில் வாழ்பவரே
எத்தனை உறவுகள் இருந்திடினும் உம்போல்
உத்தமியை இத்தரையில் யாமினிமேல் காண்போமா.

மைத்துனர், மைத்துனிமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேறுயர் தெய்வமே!

பெற்றெடுத்த பிள்ளைகள் போலெமை அணைக்கும்
வேறுயர் தெய்வமே பிரிந்துமேன் சென்றீர்
பற்றும் பாசமும் நிறைந்த நற்தாயே
பேரதிர்ச்சி தந்து பிரிந்துமே சென்றீரோ

பெறாமக்கள்.

## நம்முயிர் மாமியே!

சொல்ல முடியாத துயரத்தால் வாடுகின்றோம்
வெல்ல முடியுமா விதியினை உலகினிலே
நல்லுள்ளங் கொண்ட நம்முயிர் மாமியே
வையகத்தே உங்கள் வதனமதை மறவோமே!

மருமக்கள்.

## பண்புயர் பேர்த்தியே!

பற்றுடனே பேரரெமை பாரினிலே அணைக்கும்
பண்புயர் பேர்த்தியே எங்குநீர் சென்றீர்
நற்றுணை நீங்கள் என்றுயாம் இருக்க
நானில வாழ்வைத் துறந்துமேன் சென்றீர்.

பேரமக்கள்.

## துயரகற்ற மாட்டீரோ!

இடர்வந்த போதெமக்கு உடன்வந்து உதவிடுவீர்
வடமிழந்த தேர்போல் திடமிழந்தே வாடுகின்றோம்
நடமாடும் தெய்வமாய் நானிலத்தே மிளிர்ந்தவரே
உடன்வந்து எங்கள் துயரகற்ற மாட்டீரோ.

உற்றார், உறவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதினெண்ம வயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் பண்புணர்த்தி.....

அமரர் திருமதி.சிந்தாமணி கோபாலசிங்கம் அவர்களின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருற்றேன். இல்லறமெனும் அழகிய மாளிகை யில் ஒரு அரசியாய் இருந்து உற்றவரும் மற்றவரும் போற்றும் நற்குணத் துடன் வாழ்ந்து சென்றுள்ள கோபலசிங்கம் அவர்களின் துணைவி யாரின் நினைவுகள் நெடுந்தீவு மண்ணிலும், வாழ்ந்த ஊரிலும், காலத்திருந்து வாழ்வின் சூட்சகமங்களைச் சொல்லும் வாழ்க்கையின் பயணத்தில் குடும்பம், பிள்ளைகள் எனும் அங்கம் சமுகத்தில் ஒரு தனி மதிப்பை கொண்டுவரும் பண்புமிக்கது. அந்த வகையில் நற்பிள்ளைகளை ஈன்று, கல்வி கற்பித்து வாழ்க்கைக்கு வழிகாட்டி துணைவருக்கு இன்பத்திலும், துன்பத்திலும் துணையாய் இருந்து மேன்மைகளில் மகிழ்ந்து அமரர்.சிந்தாமணி கோபாலசிங்கம் அவர்கள் விடைபெற்றுள்ளார். 'வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம்' என்ற முன்னோர் வழக்கிற்கு இணங்க நற்பண்புகளை அவர்களிடமிருந்து பெற்று வாழும் பண்புதான் அவர்களுக்கு செய்யும் உண்மையான ஆத்ம சாந்தி வணக்கம். மரணம் என்பது எல்லோருக்கும் எழுதப்பட்டது. என்ற வாழ்க்கை உண்மையை ஒவ்வொருவரின் மறைவிலும் உணர்ந்து கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியை தேடுதல் சாலப்பொருத்தம் என்பேன். அமரர் அவர்களின் குடும்பத்திற்கு என் ஆழ்ந்த இரங்கலைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்

நன்றி

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மனச் செல்வியாய் உதவிப் பல்லோரை வாழ்வித்த "தவம்"

தன்னைத் தன்னந்தனியே தவிக்க விட்டுத் தவம் அமரராகி விட்டாரே என்று ஆறாத்துயரில் ஆழ்த்திருக்கும் தம்பி கோபாலசிங்கம் இயற்கையின் நியதியை ஏற்று ஆறுதலும் தேறுதலும் பெறப் பிரார்த்திக்கின்றேன்.

இல்லறத்தை நல்லறமாக்கி இசைபெற வாழ்ந்த தம்பதிகளில் ஒருவர் நீங்கிடின் "சோடிழந்த அன்றியைப்போல்" மற்றயவர் துடிப்பது காணச் சகிக்காத காட்சியே.

உதவியை வேண்டியோருக்குத் தன்னலம் பாராது ஓடி ஓடி உதவிய சாதனைகளுக்கு வையகமும் வானகமும் ஈடாகாது. திரு.கோபாலசிங்கம் போன்ற பண்புடை அன்பர்கள் நம்மிடையே இல்லாதிருப்பின் நலிந்தவர் களும் ஏதிலிகளும் தேற்றுவார் இன்றித் தெரு வில் நிற்கவேண்டியதே கணவனின் நலன்புரி சேவைக்கெல்லாம் நல்லா தரவாய் அமரராகி விட்ட தவம் ஆற்றிய பங்களிப்பைக் கண்டு வியந்த வருள் நானும் ஒருவனாவேன்.

"சிந்தாமணி" என்பதே பெற்றோர் இட்ட பெயர். எட்டுப் பிள்ளை களில் கடைக்குட்டிதான் சிந்தாமணி அழகும் செழிப்புமாய் அவதரித்த கடைசிப்பிள்ளையைக் குடும்பத்தவர் "தவம்" என ஆசையோடு அழைத்தார் கள். அதே அன்போடும் ஆசையோடும் உற்றாரும் உறவினருமே இறுதிவரை தவம்' என அழைத்து இன்புற்றனர்.

தவம் ஒரு செம்மனச் செல்வியாய் வாழ்ந்தார். "மனமது சுத்தமானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்பது பழமொழி மனத்தின் அழகு முகத் தில் தெரியும் என்பர் அகமும் முகமும் மலரச்சிரிப்பதும் விருந்தோம்பலும் திரு.கோபாலசிங்கத்தார் குடும்ப விசேட குணம்,

"செல்விருந் தோம்பி வருவிருந்து காத்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

எனத் தமிழ் மறை கூறியது தவத்தின் வாழ்க்கை வரலாற்றால் உறுதிப் படுத்துவதைக் காண்கின்றோம்.

தவம் எனது மூத்த அண்ணியின் கடைசித்தங்கை அவரது பிள்ளைப் பருவத்திலிருந்து அமரராகும் வரைக்கும் அவர்மேல் அன்பு பாராட்டி மகிழ்ந்துள்ளேன். மாவிலித்துறை மாளிகையிலும் றக்கா வீதி, மாடிமனை யிலும் விருந்தாளியாயிருந்து உண்டுகளித்தது நீங்கா நினைவாய் நிலைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பினும் அமரர் தவத்தின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொள்ள இயலாததானது வேதனை தராமலில்லை. என் செய்வேன்?" தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கொள்ளே" என மாணிக்கவாசக சுவாமிகள் விண்ணப்பித்தது போன்று விண்ணப்பித்து தம்பி கோபாலசிங்கத்திடம் மன்னிப்புக்கோர நிற்கின்றேன்.

30 – 5 /3 ,நெல்சன் இடம்,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.

அன்புடன் அண்ணன்
R.S.நடராசா
MA, PGDE, SLEAS
Retired Principal
Pallay Teacher Training College.

*எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் அப்பொருளின்*
*உண்மை நுணுகி உணர்வதே அறிவாகும்*

*- திருவள்ளுவர் -*

*அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு*
*உரிமையாக்கி வாழ்வர்*

*- திருவள்ளுவர் -*

*அயலானை நேசி, அதற்காக அவனையும் உன்னையும்*
*பிரித்து வைக்கும் வேலியைப் பிடுங்கி வீசாதே*

*- ஜேர்மன் முதுரை-*

*நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல*
*அமைதியுடனிருக்க வேண்டும்*

*-புத்தர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம் அன்ரிக்கு கண்ணீர் காணிக்கை

தவம் அன்ரி என எங்களால் அன்போடு அழைக்கப்படும் திருமதி.சிந்தாமணி கோபாலசிங்கம் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு மிகவும் மனவேதனை அடைந்தேன். நோய்வாய்ப்பட்டு குறுகிய காலத்திற் குள் இயற்கை எய்தியமை எல்லாருக்கும் மிகவும் கவலைக்குரியதாக அமைந்தது.

நெடுந்தீவு மாவலித்துறையில் மிகவும் சிறப்புடன் வாழ்ந்த குடும்பம், எல்லாரிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகி வந்தாரை வரவேற்று உபசரித்து மகிழும் பண்பு கொண்டவர்கள் நெடுந்தீவு மக்கள். அதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் தவம் அன்ரி என்றால் மிகையாகாது. நாங்கள் பாடசாலை செல்லும் காலத்திலிருந்து அறிந்திருந்தாலும் அதன் பின்னைய காலத்தில் எங்களின் வாழ்க்கை மாவலித்துறையில் தான் என்று அமைந்தது. நெடுந்தீவு கிழக்கு சனசமுக நிலையம், அதற்கு முன்னால் அமைந்திருக்கும் அரசமரம், துறைமுகம், எட்மன் அண்ணன் அவர்களின் தேநீர்க் கடை என அரட்டை அடித்திருந்த காலம் மாவலியில் வசந்தம் வீசா விட்டாலும் வாடையும், கோடையும் எங்களுக்கு வசந்தம் தான். எங்களின் கோலம் முழுதும் அறிந்த ஒருவர் என்றால் தவம் அன்ரியாகத் தானிருக்கும் நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய வளர்ச்சிக்கு நிறைய உதவிகள் புரிந்துள்ளார். நடாத்தப்படும் அனைத்து விழாக்களுக்கும் தேவையான உதவிகள் நாடிச் செல்லும் இடம் தவம் அன்ரியின் வீடாகத்தானிருக்கும். எல்லா உதவிகளையும் மனங்கோணாமல் செய்து என்றும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவரின் சிறப்பே எமது ஊருக்கு அழகுதான்.

நான் அரச சேவையில் சேர்ந்த பின்பு நெடுந்தீவு சென்றாலும் பின்பு அவர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறிய பின்பும் அவர்களின் வீட்டுக்கு அடிக்கடி சென்றுவரும் சந்தர்ப்பம் கிடைத்தது. எப்பொழுதும் சிரித்த முகத்துடன் வரவேற்று உரையாடும் பண்பே சிறப்பானது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் என எப்போது நிறைந்து காணப்படும் இடமாக அவரது வீடு காணப்படும்.

இவ்வாறு சிறப்பாக வாழ்ந்த அன்ரி திடீர் என நோய்வாய்ப்பட்டு குறுகிய காலத்திற்குள் இறைவனடி சேர்ந்தது அவரைத் தெரிந்த அனைவருக்கும் மிகவும் சோகம் நிறைந்த நிகழ்வாகும். அவரின் துயரால் துன்பப்படும் அவரது கணவர் திருவாளர் கோபாலசிங்கம், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருடனும் எனது அனுதாபத்தை பகிர்ந்து கொள்வதுடன் அன்ரியின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**ஜே.எஸ்.செல்வநாயகம்,**

நெடுந்தீவு – 14. உதவிச் செயலாளர், ஆளுநர் அலுவலகம், வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவப் பயனாய் வந்துதித்த தவமே!

தவப் பயனாய் வந்துதித்த தவமே
நான் தவம் செய்தே கைகோர்த்தேன் உனையே
எத்தனையோ நாடு சென்று எல்லா நோய்க்கும்
ஏக்கமின்றி வைத்தியம் செய்தேனம்மா - எனினும்
இச்சிறிய கட்டிதனை மறந்தேனம்மா
இப்பெரிய கொடுநோயை அறியேனம்மா
முன்னரே அறிந்திருந்தால் அந்நேரம் - கண்
மூடாது எங்கு சென்றும் தீர்த்திருப்பேன் அறிவாய் அம்மா
உன் பிரிவு கணந்தோறும் வாட்டுதம்மா
ஊமையாய் அழுவது கேட்கும் அம்மா
சிங்கப்பூர், சுவிஸ் நாடு, லண்டன் எல்லாம்
சீருடன் சுற்றுலா சென்றுவந்தோம் அம்மா
தாய் நாட்டுத் தலங்களுடன் இந்தியத் தலம் யாவும்
தாராளமாய், தரிசித்தோம் அம்மா - இருந்தபோதும்
காவனுனைத் தொடர்ந்து வந்தெனைப் பிரித்தானம்மா
உன்பிரிவால் என் நெஞ்சு வெடிக்குதம்மா
உன் உருவம் முழுநாளும்,கண்முண்ணே நிற்குதம்மா
உன் நாமம் என்காதில் ஒலிக்குதம்மா
உன் நினைவில் எப்போதும் இருப்பேனம்மா
உன்னிடத்தில் அதி விரைவில் வருவேனம்மா
அக்காவும், நானுமுனை ஒரு மாதம் அயராது பார்த்தோம் அம்மா
ஆனாலும் உன் உயிரை காப்பாற்ற முடியவில்லையம்மா
அதிவிரைவாய் டாக்டர்களும் செயற்பட்டுப் பார்த்தாரம்மா
ஆனாலும் எமதூதன் உன் உயிரைப் பறித்தானம்மா
கணப்பொழுதில் மறைந்துவிட்ட உன் சிரிப்பை
காலமெல்லாம் தேடினாலும் எங்கு காண்பேன்
சிறப்புடனே இறுதி நிகழ்வை செய்த போதும்
சிந்துகின்றேன் தினம் கண்ணீர் உனை நினைத்து

நின் பிரிவால் துயருறும்
அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

பஞ்சைப் போல் நெஞ்சம்
கொண்ட அம்மம்மா! 60வது
வயதிலும் இருபது
வயதினராய் பழகியவர்
எவரோடும் இன்
முகத்தவராய்; வந்தோர்
யாவரையும் வாசலில்
காத்திருந்து
அன்பாக வரவேற்று
விருந்தோம்பி; அன்பால் பலர்
மனம் தொடுகின்ற ஆற்றல்
கொண்டு என்றும்
வஞ்சகத்தை அறியாத
வாழ்க்கை வாழ்ந்த
அம்மம்மா, பாதியிலே விதியே
பகையாகியது என்பதைத்
தவிர வேறென்ன?
எல்லோர்க்கும் சாவுண்டே
எனினும் மண்ணில்
இழப்பென்றால் மனம்
ஏனோ ஏற்பதில்லை
இம்மண்ணில் நம் கண்முன்
எப்போதும் புன்சிரிப்புடனே
நல்லவராய் வாழ்ந்த
தெய்வம்! "நான் இல்லை
என்றால் தெரியும் என்று
சொன்ன சொல்லை
நிசமாக்கி" தாத்தாவை
தனியே தவிக்க
விட்டு சென்றதேனோ! இனி
எப்பிறப்பில் காண்போமோ
புன் சிரிப்பை?

பேத்தி தரிசா(சுவிற்சலாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றத்து மல்லிகையாய் வாழ்ந்த அன்னையோ...!

முற்றத்து மல்லிகையாய் மணம்வீசி அனைவரையும்
சுற்றத்தவராய் மதித்து மகிழ்ந்திட்ட அன்னையே...
நற்றவம் செய் புண்ணியத்தால் வந்துதித்து
குற்றமற்ற குலக்கொழுந்தாய் மேதினியில் வாழ்ந்திட்டீர்!

எதுபத்தோராண்டுகள் இம்மண்ணில் வாழ்வு தந்து
தொழுவதற்குரிய நல்ல பெண்மணியாய்த் திகழ்ந்து
அழுவதற்காய் கணவரையும், குழந்தைகளையும் விட்டே
முழுவதுமாய் உடல் துறந்து மண்ணை விட்டகன்றீர்!

சமூகமொன்றின் விருப்பத்திற்கு வித்தகியாய்த் திகழ்ந்து
சுமுகமாக அனைவரையும் பேணிக்காத்து நின்று
எது நேரினும் இடர்களைந்து இதுவரை வாழ்ந்து
விதியினுக்கு விடையாகி விண்ணேகி சென்றன்னையே!

கோபாலசிங்கம் என்னும் உத்தமருக்கு துணைவியாகி
காலமெல்லாம் பணி செய்து உத்தமியாகி நின்று
குலதெய்வம் தனைப்போற்றி குலமகளாய் விளங்கி
நலமுறு பிள்ளைகளையும் விட்டேகினீரே சாந்திபெற

ஓம் சாந்தி சாந்தி சாந்தி,

பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரான மதி மிகுந்த குலத்துதித்த பெண் திலகம்

ஊரும் உறவும் உரிமைகட்கும் மேலான
பேரும் புகழும் பெருமைகளும் சேர்ந்தநலம்
சீராய் விளைந்தசெல்வமும் சுற்றமுமாய்
தாராளமாய்த் தழைத்த தர்மமிக்க சிந்தையுடன்
தேரோடும் வீதியிலே செழித்திருந்த நங்கை நல்லாள்
கூரான மதிமிகுந்த குலத்துதித்த பெண் திலகம்
சிந்தாமணி உறவின் சிகரமவர் கைப்பிடித்த
கோபாலசிங்கமெழிற் கோமானாய் முன்னடக்க
நேரான காரணராய் நிகர்த்த வளம் இவ்வுறவே
சோராத நல்லுழைப்பும் சுந்தரமும் மேலோங்க
ஊரார் பெருமையுற உலவியதும் இவர் துணையே
வாழ்க்கையது பொய்யென்பர் வாழ்வினொளி மெய்யென்று
நீர்க்குமிழி வாழ்வுடலம் நீத்தாலும் பெயர் துலங்கும்
அழகும் அறிவுமவர் அயல்மகிழ ஆதரிக்கப்
பழகும் பலமும் பண்புகளும் எம் நினைவில்
அழியாது உம் ஆன்மசாந்திக்காய் வேண்டிமனம்
தொழுகின்றோம் சாந்தி சாந்தி
தொடர்க உமதன்புறவே!


க.அரசரத்தினம்
கோட்டக் கல்விப்பணிப்பாளர்
(ஓய்வு நிலை)
நெடுந்தீவு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் மாதரசி சிந்தாமணி கோபாலசிங்கம்**

அவர்களின்

# மறக்கமுடியா நினைவுகள்

அம்மா, அம்மா தவம் அம்மா, நீ
அப்பா அம்மா மடியினிலும்
அண்ணா, அக்காமார் தோள் மேலும்
அன்பு மகளாய் நீ வளர்ந்தாய்

அத்தை, மாமன்மார், கைமேலும், மெய்மேலும்
அனைவரும் உன்னை அணைத்ததனால்
அவனியில் உன்கால் படிந்ததில்லை
அப்படி வளர்ந்த வளர்மதியே
அழகுச் சிலையே நீயம்மா.

அன்பு மாமாவின் கடைக்குட்டி
அருமை மாமி வளர்த்தெடுத்த
அன்புக்குயிலே மாமயிலே
அன்பால் வளர்ந்த தெய்வமகள்.

அம்மனைப்போல நீ வளர்ந்து
அத்தனை கலையும் படித்த மகள்
அனைவர்க்கும் உதவி செய்ததனால்
அத்தனை மக்களும் வாழ்த்தினரே.

அடுத்து, அடுத்துப் படிப்பதற்கு
அப்பாவை இழந்த மகளாச்சே
அப்படி இருந்தும் கற்றதினால்
அனைவரும் போற்றச் சித்தி பெற்றாய்.

அழகுக்கு அழகாய்க் காண்கையிலே
அப்புமாமி பெற்ற மகன்
அவரும் உன்னைப் பார்த்திருப்பார்
அவரும் உன் போல் கடைக்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாமாரின் அயரா ஊக்கத்தால்
அப்படிப் படிப்பில் உயர்ந்தனரே
அந்தக்காலம் பருவத்தில்
அவரும் இவரும் பார்த்திருப்பர்.

அன்பு மொழிகள் பகிர்ந்திருப்பர்
அவர்கள் மனமும் நிறைந்திருக்கும்
அதனால் வந்த பலனேதான்
அவரும் இவரும் - கலந்தனரே!

இருவர் மனமும் கலந்ததனால்
இருவர் மகனாய்ப் பிறந்தனரே
இன்று வரை - சிரித்துச் சிரித்துப் பேசினாய்
இறுதியில் வந்த துன்பமென்ன

அம்மா, தாயே தங்களை நாம் அனைவரும்
சூழ்ந்து நின்று கண்ணீர் மல்கினோம்
தேவாரம் பாடினோம்
அம்மா பூவுலகை விட்டுத் தேவுலகம் போனதேனோ?

தங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

தங்கள் அன்பு
மைத்துனர் (மாமி மகன்)
வ.கு.பாலசிங்கம் (குடும்பத்தினர்) கனடா
முன்னாள் விவசாயப் போதனாசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை அப்பம்மாவே எங்கு சென்றீர்கள்?

அன்பாக வரவேற்று உபசரிக்கும் ஆசை அப்பம்மாவே
எங்கு சென்றீர்?
ஆசையுடன் சிரித்துக்கதைத்து என் மனதில் பதிந்த அப்பம்மாவே
இனி எப்படி உம்மை மறப்பது?
இப்போது என்னைப் பிரிந்து சென்றதன் காரணம் யாதோ?
மனம் நொந்து அழுகிறேன்?
ஈற்றில் எனக்கு எத்தனை பேர் இருந்தாலும்
உம்மைப்போல் அகிலத்தில் எவருமில்லை
உம்மிடம் கற்ற பல அறிவுரைகள் உங்களை எனக்கு
மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்துகின்றது?
ஊருடன் கூடி அழுகிறேன்
எங்கு சென்றீர்? என் ஆசை அப்பம்மா?
என் மீது அளவற்ற அன்பைப் பொழிந்து எங்கு சென்றீர்?
என் மீது என்ன கோபம்?
ஏற்றமுடன் வாழ்ந்த என் செல்ல அப்பம்மாவிற்கு
இக்கொடிய நோய் வந்ததன் காரணம் யாதோ?
ஐயம் இட்டுண் எனும் வார்த்தைக்கு அர்த்தமே
நீர் தான் அப்பம்மா
ஒவ்வொருவரிடமும் இனிய சொற்களைப் பேசி மனம் கவர்ந்த
அப்பம்மாவோ எங்களை பிரிந்து எங்கு சென்றீர்?
ஒருடலும் ஈருடலுமாய் இருந்த அப்பப்பாவை தனியே தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்?
ஔடதம் பல செய்தும் உம்முடலை விட்டு உம்முயிர் பிரிந்தது ஏனோ?
என் அன்புமிகு அப்பம்மா உம்மை இனி நான் எங்கு காண்பேன்? என்ற ஏக்கம் என் - மனதில் என்றும் இருக்கும்

*அன்பு பேரப்பிள்ளை*
*மிதுஷா தயாபரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதன்பு மாமி

தாய் அன்பிற்கு இணை இல்லை
தரணி சொன்ன போது எங்கள் தாய்மாமன்,
வழிவந்த மாமியே உம் அன்பில் கண்டதில்லைக் குறைவேதும்,
கண்விழித்தோம் பகலிரவாய் உமை காக்கும் ஆவலுடன்
காலமது செய்த கோலம் கடைசி வரை நாம் இருந்தோம் மாமி.
நோய்கள் பல இருந்த போதும் தளரவில்லை எங்கள் மாமி,
நேசமுடன் எங்களை காணும் போது எல்லாம்
பாசமுடன் அரவணைத்து பல விருந்து அளிப்பீர்கள்
மாமி என்று அழைப்பதற்கு யாரும் இல்லை
இவ்வுலகில்,
உங்கள் நினைவில் வாடுகின்றோம் மாமி
எப்போ? உங்களை காண்போம்
உங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

இப்படிக்கு மருமக்கள்
மலர், ரதி, ராசன், நந்தா, அப்பன்

முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது. அது போலவே சொல்லொணாத் துன்பங்கட் கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.

– காந்தியடிகள்

மனத்தைச் செல்வழி விடாமல், தீமையிலிருந்து அகற்றி நன்மையான வற்றில் செலவிடுவதே அறிவு .

– திருவள்ளுவர் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Grandma,

Every time I came to srilanka. I visited your house in jaffna everyday, you were sweet, caring and lovely person and we will miss you

very much,

We Will have respect for you always, remembering you for the of our lives, The time I spent with you was little, but I learned a lot and was personally inspired by your socialism.

I will try to achieve my ambitions and satisfy you. With much sympathy For your great loss. We will miss you, Rest in peace and god bless you always.

***from your granddaughter.***
***Birannavi Thiyagarajah***
***England.***

Dear Grandparents,

My grandparents were compassionate: their kindness live in our hearts. I mourn Their loss and absence We will cherish your memories and I thank you for what you did.

I've never seen my grandmother face to face and I only Know my Grandfather well. I aim to do well and make you satisfied in the future.

I Will miss you both and you will never be forgotten.

Rest in peace and god bless you forever.

***from your Granddaughter,***
***Birannavi Thiyagarajah London***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் மனதில் நீங்கா நினைவுகளுடன் "தவம் அன்ரி" எனும் அன்பு உறவு

ஈழமணித்திருநாட்டின் வடக்கே அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றாக விளங்கும் நெடுந்தீவில் சைவமும், தமிழும் கமழும் சிறந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்தான் அமரர் திருமதி.கோபாலசிங்கம் சிந்தாமணி அவர்கள்

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்றும் உரியர் பிறர்க்கு"**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர். தான் தவம் அன்ரி. நெடுந்தீவில் இறந்தகாலத்திலும் சரி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் எல்லோரையும் அன்புடன் அரவணைத்து, உணவளித்து தங்கவைத்து ஆதரவு வழங்கிய அன்பு உள்ளம் இன்றில்லை எனும் போது கனவோ என எண்ணத் தோன்றுகின்றது.

தவம் அன்ரி அவர்கள் பல தடவைகள் சுகவீனமுற்று இருந்தாலும் வீட்டுக்கு வருவோரை வாசலில் வந்து வரவேற்கும் அந்த முகம் எம்மனங் களில் நிலைத்துள்ளது. அன்பு, கருணை, அடக்கம், போன்றவற்றின் அணிகலனாக விளங்கியவர். இவர் தன் கணவருக்கு நல்லதோர் மனைவி யாகவும், அவரின் முன்னேற்றத்திற்கு பக்க பலமாக வும், சரியானதோர் வழிகாட்டியாகவும், பிள்ளைகட்கு நல்லதொரு அன்னையாகவும் இருந்து கண்ணை இமைகாப்பது போல் காத்து வந்தார். இவரது பிரிவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். குடும்பம், உறவுகள், நண்பர்கள் யாவரும் ஆறாத்துயரில் மூழ்கி நிற்கின்றோம்.

"ஒரு பொல்லாப்புமில்லை எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம்" எனும் ஈழத்துச்சித்தர் சிவயோகர் சுவாமிகளின் அருளுரையே எமக்கு ஒரு தோற்றமாக அமையும். பிறந்தவர்கள் இப்பூவுலகில் நீடுவாழப் பிறந்தவர்கள் அல்லர். என்றோ இறையழைப்பு வரும் போது அவனிடம் போக வேண்டியவர்களே இம் மானிடப் பிறவி எடுத்தோர் இதனை மனதில் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**திருமதி சா. கிருஷ்ணதாஸ்,**
கோட்டக்கல்விப்பணிப்பாளர், நெடுந்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுறையும் தெய்வத்துள்

தாயகம் பல நன்மக்களைப் பெற்ற பெருமைக்குரியது பலர். இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பலர் எம்மைப் பிரிந்து எங்கேயோ சென்று விட்டார்கள். பிரிந்தாலும் பிரியாது எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும். திருமதி.சிந்தாமணி கோபால சிங்கம் அவர்களுள் குறிப்பிடதக்கவர். பெயருக்கேற்ற பண்பும் திருவுருவும்

கல்லூரியில் கற்ற பொழுது அவரை நன்கு அறிவேன். மாணவ மணிகளுள் நன்மணியாகத் திகழ்ந்தவர். அன்பு, அடக்கம், பொறுமை இன்சொல் போன்ற நற்பண்புகளின் உறைவிடம்.

இல்வாழ்வுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை எல்லோர்க்கும் எளிதில் எட்டாது. வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் அன்றில் போல் இணை பிரியாத வாழ்க்கைத் துணை கிடைத்தது பூர்வபுண்ணிய பலன்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது".**

விருந்தினரை உபசரிப்பதிலும் உற்றுளி உதவியும் உறுபொருள் கொடுத்தும் உற்றாருக்கும் மற்றோர்க்கும் உதவுவதில் இருவரும் ஒருத்தருக்கு ஒருத்தர் சளைத்தவர்களல்ல

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்.**
**வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"**

வள்ளுவரின் குறளுக்கு வாழ்க்கை விளக்கமாக வாழ்ந்தவர்.

**"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

வே.நடராஜா,
ஒய்வு பெற்ற மேலதிக
காணிப்பதிவாளர், யாழ் மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் கண்ணீர் அஞ்சலி

மாணிக்கத் தீவாளாம் இலங்கை மாதா
வல்லபஞ்சேர் பாரதமா தாவுக் கென்று
காணிக்கைப் பொருளெடுத்து நீட்டும் போது
கைதவறிக் கடல் வீழ்ந்த கனியின் சுட்டோ
வாணியெனும் கங்கைநதி உருட்டி வந்து
வங்கத்துக் கடலொதுக்கும் சங்கு முத்தோ?
காணுகின்ற பாவாடை கட்டிக் கொண்டு
கடுந்தவம் செய் அகலிகையோ? கண்ணே நீயே!

பொற்சீந்தில் கொடிபடரும் புதுமை நாடு
புகழேந்திக் கூத்தரெனும் புலவர் நாணச்
சொற்கோர்க்கும் பாவலர்கள் வாழும் நாடு
தொல்புகழின் வரலாறு சுமக்கும் நாடு
நற்பசுக்கள் பால் கொடுக்க மனைகள் எல்லாம்
நறுநெய்யில் நீந்திவரும் நல்ல நாடு
அற்புதஞ்சேர் வெடியரசன் கோட்டை கட்டி
அந் நாளில் ஆண்டு வந்த அழகு நாடே

ஊணுறக்கமில்லாமல் நோயின் போது
உடல் தளர்ந்தும் மக்களை உயிராய்க் காத்து
பேணுகின்ற தாய்மார்கள் பிறந்த நாடு
பரிவிரக்கும் மிகவுருகிப் பெருகும் நாடு
காணுகின்ற விருந்தினரை உபசரித்துக்
கைதேயக் கறிசமைக்கும் களிப்பு நாடு
ஆணவஞ்சேர் மக்களையே அலைக்கப்பாலே
அனுப்பியவர் வீரத்தை அளக்கும் நாடே

எனக் கவிஞர்கள் பாடும் சிறப்புக்களையும் பல்வகைப் பெருமைகளையும் கொண்டு விளங்கும் ஊர் நெடுந்தீவு என்றால் உண்மை இது வெறும் புகழ்ச்சியல்ல

நெடுந்தீவின் போக்குவரத்திற்கு கேந்திர நிலையமாக உள்ள இடம் மாவிலித்துறை, இம்மாவிலித்துறை முகம் அமைந்த இடத்திற்கு நேரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பக்கமாக அமைந்துள்ளது தவம் என எல்லாரும் அன்புடன் அழைக்கும் அமரர். சிந்தாமணி கோபாலசிங்கம் அவர்களின் வீடு.

இருமரபும் தூய தனிநாயக முதலி அவர்களின் வழித்தோன்றலான நெடுந்தீவு கிழக்கு திரு. இராமலிங்கம் அன்னபிள்ளை என்பவர்களது இல்லறம் எனும் நல்லறத்தின் பயனாகப் பிறந்தவர்கள் ஏழு பெண்களும், ஒரு ஆணும் இவர்களுள் கடைசிக்குழந்தையே அனைவரினதும் அன்புக்குரிய அமரர் சிந்தாமணியாவார்.

இவரது தந்தையார் அரசாங்க உத்தரவு பெற்ற வியாபாரியாவார். மேலும் சிறந்த கமக்காரர் நெடுந்தீவில் அக்காலத்தில் உற்பத்தி செய்த சாமை, வரகு, மெண்டிவ போன்ற சிறு தானியங் களுக்கும் , கற்பக தருவாம் பனையின் பயன்படு பொருள்களாகிய பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் என்பன தாராளமாக வீட்டில் இருந்தன "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கு ஏற்ப உணவில்லை எனத் தம்மை நாடி வந்தவர்கட்கு இல்லை என்ற சொல்லைத் தெரியாதவர் போல் அள்ளி அள்ளி கொடுத்துப் பெரும்புகழ் பெற்றவர்கள் இவரது பெற்றோர்.

இவர்களது கொடையின் தன்மை அமரர் சிந்தாமணியையும் பற்றிக்கொண்டது போலும்,

"எல்லோரும் இன்புற்றிருப்ப தன்றி

வேறொன்றறியேன் பராபரமே" என சாதி சமய வேறுபாடின்றி அனைவரையும் வரவேற்று உபசரித்து அனுப்பும் தன்மையினர். இவரிடம் காணப்பட்ட அன்பு, இரக்கம், அடக்கம், புன்சிரிப்பு போன்ற உயர்குணங்களால் அனைத்துப் பெரியோர்களதும் மதிப்பிற்கு உரியவராக விளங்கினார்.

நெடுந்தீவு மேற்கு திரு. சிவசுப்பிரமணியம் பார்வதி தம்பதியரின் இளையமகன் திரு. கோபாலசிங்கம் அவர்களைத் தம் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டார். அரசினர் களஞ்சியப் பொறுப்பாளராக, நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக நெடுந்தீவு பிரதேசசபையின் துணைத்தவிசாளர் போன்ற பல பதவிகள் இவரைத் தேடி வந்தன .

தான் வகித்த பதவிகள் மூலம் தான் பிறந்த மண்ணிற்கு அளப்பரிய பணிகள் செய்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். எந்த ஆணின் முன்னேற்றத்திற்கும் அடிநாதமாக விளங்குபவர் அவர்களின் மனைவியே என்பர். அந்த வகையில் கணவரின் செயற்பாடுகள் அனைத்திற்கும் கைகொடுத்து உதவியவர் அமரர் சிந்தாமணி அவர்கள் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சிமை பெறச் செய்தவராக விளங்கினார்.

"எல்லாரும் எல்லாமே பெறவேண்டும்" என்ற உயர்ந்த கொள்கை களைத் கைக்கொண்டு பல்வேறு சமய சமூகப்பணிகளுக்கு வாரி வழங்கினர்.

தங்களது இரண்டு ஆண்பிள்ளைகளினதும் கல்வி முன்னேற்றம் கருதி நெடுந்தீவை விட்டு, யாழ்ப்பாணத்தில் வளமுடன் வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

ஆண் பிள்ளைகள் இருவரும் வெளிநாடுகளில் கல்வி கற்று சிறப்புப் பெற்றனர். மூத்தமகன் கனடாவில் உயர் பதவியிலும், இளைய மகன் இந்தியாவில் கணனிப்பொறியிலாளராகவும் கல்வி கற்று விரைவில் இங்கிலாந்து செல்ல உள்ளார்.

தான் வாழ்ந்த காலத்திலேயே பாசம் நிறைந்த பிள்ளைகள் இருவருக்கும் அன்பும், பண்பும், பல்வேறு நற்குணங்களும் நிறைந்த மருமக்கள் கிடைத்தமை குறித்து மட்டில்லா மகிழ்வடைந்தார் அமரர்

சிறிது காலம் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த சிந்தாமணி நமது மண்ணில் (யாழ்ப்பாணம்) உள்ள சீரற்ற வைத்திய சேவையினால் அமராகி விட்டார், அன்பும், இரக்கமும் பல்வகைப்பண்பும் நிறைந்து தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்டு, வாழ்வாங்கு வாழ்ந்த சகோதரியின் மரணச்செய்தி அறிந்த அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கி ஆழ்ந்த கவலையைத் தந்தது. அமரர் அவர்கள் மறைந்தாலும் மரணத்திற்குப் பின்பும் வாழ்கின்றார். அவ்வாறு வாழ்தலே பிறவிப்பயன் முழுமை பெறுகின்றது என்பர். மக்கள் எல்லாம் கண்ணீர் சிந்த கவலையடைய சாகின்ற சாவே சிறந்த சாவாகும். அது எல்லாருக்கும் கிடையாது. இதனையே வான்புகழ் வள்ளுவர்

"புரந்தார் கண்ணீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்து கோள் தக்கது உடைத்து என்கிறார் (குறள் 780)
இத்தகைய நல்லுள்ளம் கொண்டவர்களுக்கு
மரணம் ஏற்படுவதைக்கண்ட கவிஞர் கண்ணதாசன்

'சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதோ?
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தை காணாயோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயே உனக்கொரு நாள்
தீ மூட்டிப் பாரோமா?
தெய்வமே உன்னை நாம்
தேம்பி அழவையோமா? என்றார்

பெண்ணின் பெருந்தக்கவளாய்விளங்கி பண்பும், பாசமும் கொண்ட அமரரை இழந்து துயருறும் அன்புக்கணவர், ஒளிமயமான எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டிய தாயை இழந்து தவிக்கும் அன்பு மக்கள் பண்புடை மருமக்கள், அன்பு நெஞ்சத்தைப் பிரிந்து துயருறும் உடன் பிறப்புக்கள், பெறாமக்கள் உறவினர், சுற்றத்தவர் அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின் றோம். அமரரின் இறப்பினால் கவலை அடைந்து ஆறாத்துயரில் ஆழ்ந் துள்ள அனைவருடனும் இணைந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாபூஷணம் புலவர் அரியநாயகம்,**

நெடுந்தீவு

# வாழ்வில் வெற்றிபெற

சுறுசுறுப்பாய் இரு ஆனால் படபடப்பாய் இராதே
பொறுமையாய் இரு ஆனால் சோம்பலாய் இராதே
சிக்கனமாய் இரு ஆனால் கருமியாய் இராதே
அன்பாய் இரு ஆனால் அடிமையாய் இராதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
கொடையாளியாக இரு ஆனால் ஆண்டி ஆகிவிடாதே
இல்லறத்தை நடத்து ஆனால் காமவெறியனாகாதே.
பற்றற்று இரு ஆனால் காட்டுக்குப் போய்விடாதே.
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே.
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரினிலே நல்லதோர் வாழ்க்கைத் துணையாய்

எனது அன்புக்கினிய நண்பன் திரு.சுப்பிரமணியம் கோபாலசிங்கம் அவர்களின் அன்புத்துணைவியார் திருமதி.கோபாலசிங்கம்.சிந்தாமணி அவர்களின் பிரிவுத்துயர் செய்தி அறிந்து நாமும் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளோம். சிந்தாமணி என்னும் பெயருக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அமரர் அவர்கள் நான்கு பக்கமும் அலை கடலினால் சூழப்பட்டு அழகாகக் காட்சி தரும் நெடுந்தீவினிலே உதித்திட்ட மங்கை சிந்தாமணி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியையும் க.பொ.த உயர்தரக்கல்வியினையும் உயர்வோடு பெற்று தனது சொந்த மைத்துனரான உயர்.திரு.கோபாலசிங்கம் அரச களஞ்சியப் பொறுப்பாளர் அவர்களை கரம்பிடித்து இல்லற வாழ்வுதனில் தடம்பதித்தார். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்ற தமிழ் மூதாட்டி ஔவை யாரின் வாக்கிற்கு அமையதன் கணவனுக்கு ஏற்ற துணைவியாக வாழ்ந்து மறைந்தவர் தான் எம் சிந்தாமணி அம்மா.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள். ஆனால் இறைவனூடாகத் இணைந்த அமரர்.திருமதி கோபாலசிங்கம் சிந்தாமணி அம்மா அவர்கள் சைவச மயத்திலும் ஆம்மீகத்திலும் தன்னை மிக ஆழமாக ஈடுபடுத்திக் கொண்டவர். இல்லறம் என்னும் நல்வாழ்க்கையை நல்லறமாக கடைப்பிடித்து தனது கணவர் பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் அவ்வவ்போதே செவ்வனவே செய்து மற்றவர்களுக்கு உதவி புரிவதுடன், உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும் வழிகாட்டி யாகவும் முன் உதாரணமாகவும் திகழ்ந்து அனைவரது உள்ளங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றவர்கள் திரு.திருமதி.கோபாலசிங்கம் சிந்தாமணி அவர்கள். என்னுடன் நீண்டகாலம் வங்கியில் கடமையாற்றிய தம்பி கணபதிப்பிள்ளை சுந்தரராஜனின் சொந்தத் மாமன், மாமியார் என்பதால் அவர்களுடன் அடிக்கடி பழகுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது எல்லாம் வந்தாரை வரவேற்கும் உயரிய பண்பை அமரர்.சிந்தாமணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிடம் கண்டேன். கனிவான மொழியாலும் இனிமையான வார்த்தைகளாலும் அன்பு வழி நின்று எல்லோரையும் பாகுபாடு இன்றி அரவணைக்கும் உயரிய பாங்கினை அவரிடத்தில் காணக்கூடியதாக இருந்ததை எப்போதுமே மறக்க முடியாது. இரக்க குணமும் கருணை உள்ளமும் இவரது விசேட அம்சங்கள் பிறருக்கு உதவுவதும் மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்வதும் போன்ற நற்பண்புகளை கொண்டிருந்ததோடு சுற்றம் சூழலுடன் நல்லுறவைப் பேணியும் வாழ்ந்து காட்டியவர்.

மானுட வாழ்வின் மகத்துவம் கருதி
இனிதே இன்புற வாழ்ந்தும் காட்டினீர்
புனிதம் பேணியே பெருந்தகை நீரும்
இறைவனடி சென்றடைந்திட இறைவனே
வேண்டி நிற்கின்றோம் என்றென்றும் உங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்
முடி சார்ந்த மன்னரும் முடிவில்
ஒருபிடி சாம்பல் ஆனது போல்
தோற்றம் என்றுண்டோ அன்று மறைவும் உண்டு.
ஓம் சாந்தி!! சாந்தி !! சாந்தி!!

அன்புடன்

லயன் , மாணிக்கம் பரமானந்தம் JP

ஓய்வு நிலை பிரதம முகாமையாளர்,

தேசிய சேமிப்புவங்கி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR AMMAMMA!

Our lovely beauty our Thavam ammamma. We always admired her beauty when ever I see her. she was very adoring care taking and she always welcomed us with her unique smile Those memories were so special.

We didn't even imagine that we will miss you so sooner we enjoyed the extreme overflow of love and care of an ammamma from her though she was not our own ammamma

she was a gem of a person. she always gave me chocolate for why we loved you more

We lost our precious diamond who shines forever in our minds as crystallized memories

We miss you ammamma. But we will not surely miss your memories that will always be with us and with for your blessings and guidance for the uploming segmaents of our lives.

grand daughter
sowmy and
Grand son
sarangan


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்தின் பின் கணவருடன்



நெடுந்தீவு வீட்டில் அம்மா, மாமி. கணவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாமணி அன்னையின் நினைவுகள்

என்னுடன் திரு. திருமதி கோபாலசிங்கம் அவர்களின் குடும்ப உறவானது இருதசாப்த காலமானது. இவ் உறவானது அண்ணன் கோபாலசிங்கமும் நானும் உணவுக்கட்டுப்பாட்டுக்கிளையில் ஒன்றாக கடமையாற்றிய பொன்னான சேவைக்காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும்.

